FORUM AGAINST GENDER BASED VIOLENCE SRI LANKA

**பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசியமட்ட செயலணியின் அறிக்கை**

காவல்துறை பிரதி பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) பதவிக்கு நியமிப்பது தொடர்பான விதிமுறைகளில் “பெண்கள்“ என்ற சொல் குறிப்பிடப்படாததால், நாட்டில் எந்தவொரு பெண் பொலீஸ் அதிகாரியையும் பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்க முடியாது என்பதன் அடிப்படையில், இலங்கையின் முதல் பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபராக(டி.ஐ.ஜி) நியமிக்கப்பட்ட திருமதி. பிம்ஷானி ஜசின் ஆராச்சி அவர்களின் நியமனத்தை சவாலுக்குட்படுத்தி 32 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 33 ஆண் அதிகாரிகளால் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசியமட்ட செயலணி ஆழ்ந்த கவலையடைகின்றது. எனவே, செயலணி இது தொடர்பாக அதன் தீவிர கரிசனையினை வெளிப்படுத்துவதுடன், இது உண்மையில் பணியிடங்களில் பாகுபாடு மற்றும் பால் அடிப்படையிலான பாரபட்சமானது என்றும் குறிப்பிடுகிறது.

இலங்கை அரசியலமைப்பின் 12 (2) வது பிரிவு, எந்தவொரு குடிமகன் மீதும் இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது அத்தகைய எந்தவொரு காரணத்திற்காகவும் பாகுபாடு காட்டப்படக்கூடாது என்று வெளிப்படுத்துகின்றது.

பொலிஸ் திணைக்களம் உட்பட அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் பணியாளர்கள் பால்நிலை உட்பட இலங்கையின் பல்மைத்தன்மையை பிரதிபலிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசியச் செயலணி, வேலை உலகில் பணியாளர்களாக பெண்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்க சமமான வாய்ப்புகளையும் அவர்களுக்கான இடத்தையும் வழங்குவதன் மூலம் ஆண்களினதும் பெண்களினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை கேட்டுக் கொள்கிறது.

2021 மே 18 ஆம் திகதியிடப்பட்டுள்ள மனு தொடர்பாக, இலங்கையின் முதல் பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) திருமதி பிம்ஷானி ஜசின் ஆராச்சி அவர்களுடன் உறுதியுடன் ஒன்றிணைந்து நிற்குமாறு அனைத்து குடிமக்களையும் நாங்கள் வேண்டுகின்றோம்.

இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசியச் செயலணி (GBV) பாரியளவிலான ஒருங்கிணைப்புக்களை வசதிப்படுத்துவதற்கு, தகவல்/வளங்களைப் பகிர்வதற்கு மற்றும் பால்நிலைசார் வன்முறைக்கு பல்துறை சார்ந்த பதிலளிப்புக்களை வலுப்படுத்துவதற்குமாக 2005 இல் அமைக்கப்பட்டது. தற்போது, பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான தேசியச் செயலணி என்பது அரசு, ஐக்கிய நாடுகள் சபை, தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் இத்துறையில் உள்ள தனிப்பட்ட வல்லுநர்கள் அடங்கிய 53 நிறுவனங்களின் கூட்டிணைவாகும்.